# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1758/35 - 2012 මැයි 18 වැනි සිකුරාදා - 2012.05.18

*1758/35 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 19/78.*

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உப்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

ரவூப் ஹக்கீம்,
*நீதி அமைச்சர்.*

கொழும்பு,
*2012, மே 15.*

ஒழுங்குவிதி

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உப்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1979, யூலை மாதம் 02 ஆந் திகதிய 43/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஒழுங்குவிதி, அவ்வொழுங்குவிதிக்கான அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் "யாழ்ப்பாணம்" என்னும் பதிவுக்கும் அதற்கு நேரொத்ததாக II ஆம் நிரலில் காணப்படும் "யாழ்ப்பாணம் மற்றும் புத்தூர்" என்னும் பதிவுக்கும் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம்<br>குருநகர் |

*6- 212/1*

---

*ச.வ.பீ. 19/78.*

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரால் பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

ரவூப் ஹக்கீம்,
*நீதி அமைச்சர்.*

கொழும்பு,
*2012, மே 15.*

ஒழுங்குவிதி

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1979, யூலை மாதம் 2 ஆந் திகதிய 43/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் காலத்துக்காலம் திருத்தஞ் செய்யப்பட்டதுமான ஒழுங்குவிதிக்கான, அட்டவணை பின்வருமாறு திருத்தஞ் செய்வதன் மூலம் மேலும் திருத்தஞ் செய்யப்படுகிறது :-*

*(1)* அவ் அட்டவணையின் I ஆம் நிரலிலும் II ஆம் நிரலிலும் காணப்படும் "கடுவெல நீதிவான் நீதிமன்றம்" தொடர்பான பதிவுகளை உடனடுத்துப் பின்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்" — யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றப் பிரிவுகளில் -

(அ) (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்களும் இளம் ஆட்களும் கட்டளைச் சட்டத்தின் கீழ் எழுகின்ற ; அத்துடன்

(ஆ) தண்டனைச் சட்டக்கோவையின் கீழான அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான தவறொன்றிலிருந்து அல்லது அத்தகைய தவறொன்று தொடர்பாக எழுகின்ற (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்களும் இளம் ஆட்களும் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு "சிறுவர்" ஒருவருக்கு அல்லது "இளம் ஆள்" ஒருவருக்கெதிராக அல்லது "சிறுவர்" அல்லது "இளம் ஆள்" தொடர்பில் செய்யப்படும்

எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் அல்லது கருமங்களும் ; அத்துடன்

*(2)* அவ் அட்டவணையின் I ஆம் நிரலிலும் II ஆம் நிரலிலும் காணப்படும் "யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றங்கள்" தொடர்பான ஏதேனும் பதிவை தவிர்த்துவிடுவதன் மூலமும்.

*6-212/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.